# தமிழ்

## வாரப்பாடசாலை செயற்பாட்டுப் பத்திரம்

## தரம் 12

01. பின்வருவோரில் யாரேனும் இருவர் தமிழுக்கு ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுக.
   அ. ஆறுமுகநாவலர்
   ஆ. சி.வை. தாமோதிரம்பிள்ளை
   இ. சி.வி. வேலுப்பிள்ளை
   ஈ. சுவாமி விபுலானந்தர்.

02. அ. 1. அகப்புணர்ச்சி, புறப்புணர்ச்சி என்பவற்றை உதாரணம் தந்து விளக்குக.

   2. ஏவல்வினை, வியங்கோள்வனை இரண்டிற்கும் இடையிலான வேறுபாடுகளை தெளிவு படுத்துக.

   3. பண்புத்தொகை, உவமைத்தொகை ஆகியவற்றை உதாரணம் தந்து விளக்குக.

   4. தனிப்பெயரடை, ஆக்கப்பெயரடை என்பவற்றை உதாரணம் தந்து விளக்குக.

   5. பின்வரும் வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள திசைச்சொற்களை எடுத்துக்காட்டி அவற்றின் பொருளை தருக.
   ‘‘செல்லத்துரையன் பதில் சொல்லிக் கொண்டே இயனக் கூடும் ஏறுபட்டி
   தளநாரும் கையிலே ஒழுங்கையை நோக்கி நடந்தான்’’

ஆ. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று பற்றி சிறுகுறிப்பு எழுதுக.
   1. கூட்டுவினை
   2. வினையெச்சம்
   3. வியங்கோள் வினைமுற்று

03. பின்வரும் ஐந்து வினாக்களுக்கும் சுருக்கமான விடை தருக.

   1. விகாரப்புணர்ச்சி என்றால் என்ன? உதாரணம் தந்து விளக்குக.

   2. தனிப்பகுதி, கூட்டுப்பகுதி என்பவற்றை உதாரணம் தந்து விளக்குக.

   3. மையீற்றுத் தொழிற்பெயரின் அமைப்பை உதாரணம் தந்து விளக்குக.

   4. உடைமை வேற்றுமை என்றால் என்ன? உதாரணங்களுடன் விளக்குக.

   5. செய்து எச்ச வாக்கிய இணைப்பில் பயன்படுமாற்றை விளக்குக.